**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 16/2025**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர்.முத்துராமன் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | ராஜமாணிக்கம் | தொழில் | : | அரசு மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 02nd, 2025.

**(எதிரி ஆஜர் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.03.2022ம் தேதி, காலை 06.45 மணியளவில் நான் தென்காசி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, பசும்பொன்நகர், கம்பனேரி, கடையநல்லூர் என்ற முகவரியில் வசிக்கும் ரவி என்பவரது மகன் ராஜேஷ் என்பவர் அவரை தெரிந்த ஒரு நபர் அதே தேதி மாலை 06.00 மணியளவில் தென்காசி புதுபஸ்ஸ்டாண்ட் அருகே கத்தியால் குத்தி காயம் ஏற்பட்டதாக கூறிக்கொண்டு சிகிச்சைக்கு வந்தார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). 0.5 x 0.5 cm அளவில் இடது பக்க மார்பில் குத்து காயம் இருந்தது. அதன் ஆழம் அளவிட முடியவில்லை.

(2). 0.5 x 0.5 cm அளவில் இடது பக்க மூக்கு பகுதியில் குத்து காயம் இருந்தது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, பின்னர் மேல்சிகிச்சைக்காக அவரை திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்குள்ள சிகிச்சை குறிப்புகளின் படி அவருடைய காயங்கள் கொடுங்காயங்கள் எனச் சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆகும்.

அதே நாள், இதே சம்பவத்தில் காயம் ஏற்பட்டதாக மாலை 07.05 மணியளவில் செல்லத்துரை மகன் ரவி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). 0.5 x 0.5 cm அளவில் வயிற்றுப்பகுதியில் குத்து காயம் இருந்தது.

(2). 0.5 x 0.5 cm அளவில் இடது பக்க வயிற்று பகுதியில் குத்து காயம் இருந்தது.

(3). வலது பக்க வாய்ப்பகுதியில் 0.5 x 0.5 cm அளவுள்ள குத்துகாயம் இருந்தது.

(4). 0.5 x 0.5 cm அளவில் வலது பக்க கடைவாய்பற்கள் பகுதியில் குத்துக்காயம் இருந்தது.

அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, பின்னர் மேல்சிகிச்சைக்காக அவரை திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்குள்ள சிகிச்சை குறிப்புகளின் படி அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் எனச் சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆகும். பொதுவாக கத்தியால் ஒருவரை குத்தும் போது, இவ்வாறு கொடுங்காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் குறிப்பிட்ட குத்துக்காயங்கள் சட்டை போட்டிருக்கும் ஒரு நபர் மீது படும் போது, சட்டையில் ஓட்டை விழுந்திருக்கும் என்றால் சரிதான். மூக்கு பகுதி மென்மையான பகுதி என்றால் சரிதான். ஒரு நபரின் மூக்கு பகுதியில் குத்துக்காயம் ஏற்படும்போது, அந்த பகுதி கிழிய வாய்ப்புள்ளது என்றால் கூர்மையான ஆயுத்தினால் குத்தும் போது கிழிய வாய்ப்புகள் குறைவு. ஆய்வாளர் கத்தியை காண்பித்து என்னிடம் கருத்துரு பெறவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட ரவியின் அனைத்து காயங்களின் அளவுகள் காயச்சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் 2 வது காயம் வயிற்றுப்பகுதியில் இருந்ததினாலும், 1 வது காயத்தின் அளவு என்பதினாலும் நான் தனியாக அளவு குறிப்பிடவில்லை. நான் காயம்பட்டவர்களுக்கு முதலுதவி மட்டும் தான் அளித்தேன். வேகமாக ஒருவர் ஓடும்போது, கூர்மையான தகரம், கண்ணாடி ஆகியவற்றின் மீது விழும் போது மேலே குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட காயங்கள் மேலோட்டமான காயங்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.03 11:22:49 +0530